OS: 656/2018

Date: 21.11.2025

பெயர் : மாரியப்பன் **(பி.வா.சா.2) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

1. நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் பிரதிவாதி ராஜமோகனுக்காக வந்திருக்கிறேன். பிரதிவாதி ராஜமோகன் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். ராஜமோகன் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் ஆமாம். ராஜமோகனின் தகப்பனார் கோவிந்தன் 2ம் பிரதிவாதி என்றால் ஆமாம். கோவிந்தன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் கோவிந்தனின் அக்காவின் மகன் நான். கோவிந்தன் எனக்கு தாய்மாமன்.

2. கோவிந்தன் எனக்கு தாய்மாமன் என்பதால் அவர் சொல்லி கொடுத்தப்படி அவரது மகனால் அழைத்துவரப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோவிந்தனின் பக்கத்து நிலத்துக்காரர் எனவே சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு என்ன வயதாகிறது என்றால் 80 வயதாகிறது. நான் எனது பிரமாணபத்திரிக்கையில் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லியிருக்கும் நிலையில் எந்த வருடம் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்து என்றால் ஞாபகம் இல்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் B.A., B.Ed. படித்திருக்கிறேன். என்ன பணியில் இருந்தேன் என்றால் தலைமை ஆசிரியராக பணி செய்து ஓய்வு பெற்றேன். எந்த தேதியில் ஓய்வு பெற்றேன் என்றால் 30.06.2004ம் தேதியன்று ஓய்வுபெற்றேன்.

3. நான் மெத்த படித்து நல்ல பணியில் இருந்தவன் என்பதால் எனக்கு மறதி ஏற்படாது என்றாலும், உண்மையாகவே வாய்மொழி பாகப்பிரிவினை நடந்திருந்தால் என்னால் அதுகுறித்த வருடத்தை சொல்லியிருக்க முடியும் என்றாலும் பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்பதால் தான் அதுகுறித்து என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல.

4. 7ம் பிரதிவாதி ராஜா இதே தாவா சொத்து சம்பந்தமாக 80 வருடங்களுக்கு முன்னர் 1934ம் ஆண்டுக்கு முன்பே பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 7ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 1934ம் ஆண்டுக்கு முன்பே அதாவது சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்பே பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லியிருக்கும் நிலையில் நான் அதற்கு மாறுபட்டு 60 வருடங்களுக்கு முன்பு பாகப்பிரிவினை நடந்ததாக சொல்வதிலிருந்தே நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

5. வாய்மொழி பாகப்பிரிவினை குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய எத்தனையாவது வயதில் மேற்படி பாகப்பிரிவினை நடந்ததாக சொல்கிறேன் என்றால் என்னுடைய 20வது வயதில் நடந்தது. நான் 60 ஆண்டுகளுக்கு முன்பு பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லும் நிலையில் 7ம் பிரதிவாதி 80 ஆண்டுகளுக்கு முன்பு பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லியிருக்கும் நிலையில் 7ம் பிரதிவாதி சொன்னது தவறுதான என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை.

6. நான் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதன் அடிப்படையில் பட்டா பெற்று அனுபவம் செய்துவருவதாக சாட்சியம் அளிக்கும் நிலையில் யார்யாா பெயரில் என்னென்ன சர்வே எண்ணிற்கு பட்டா

வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும். யு.டி.ஆர் பட்டா வழங்கப்பட்டது. பிரதிவாதி அய்யம்மாளுக்கு பட்டா எண்.7ல் சர்வே எண் 37/3க்கு விஸ்தீரணம் சுமார் 80 செண்ட் இருக்கும். வாதியின் தகப்பனார் கந்தசாமிக்கு பட்டா எண்.27, 43ல் சர்வே எண் 37/2Bல் 20 செண்டும், மற்றும் மொத்தமாக வாதிக்கு 17 சர்வே எண்களில் பூமி இருக்கிறது. விஸ்தீரணம் சரியாக நினைவில்லை. பிரதிவாதிக்கு 10 சர்வே எண்ணில் பூமி இருக்கிறது. தனித்தனியாக நினைவில்லை.

7. வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும், யு.டி.ஆர் பட்டா வழங்கிய காலத்தில் பெரியவர்கள் கைகாட்டிவிட்ட இடங்களை அனுபவித்து வந்தவர்களுக்கு அதன்பேரில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்றாலும், வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

8. வாதியின் தகப்பனார் கந்தசாமி 2010ம் ஆண்டு இறப்பதற்கு முன்பு வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே பாகம் பிரிப்பது சம்மந்தமாக ஒரு பஞ்சாயத்து நடத்தப்பட்டது என்றாலும் அதில் நானும் கலந்துகொண்டேன் என்றாலும் சரியல்ல. அதுபோன்ற பஞ்சாயத்து எதுவும் தெரியவில்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் மேற்படி பஞ்சாயத்தில் கலந்துகொண்டு நிலம் சர்வே செய்யப்பட்டபோது உடனிருந்தேன் என்றாலும் அதனை நான் மறுத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எந்த பஞ்சாயத்திலும் கலந்து கொள்ளவில்லை. எந்த பஞ்சாயத்தும் தெரியாது.

9. முதல் முறை அளந்தது சரியில்லை என்று சொல்லி இரண்டாவது முறை எனது முன்னிலையில் தான் நிலம் சர்வே செய்து அளக்கப்பட்டது

என்றால் சரியல்ல. இரண்டாவது முறை அளவீடு செய்தபோதும் சரியாக அளக்கப்படவில்லை என்று நின்றுபோய்விட்டது என்றால் சரியல்ல. இரண்டாவது முறை நிலத்தை அளக்க முயற்சி செய்து அளக்கமுடியாத போனதால் வாதியின் தகப்பனார் பஞ்சாயத்தாரிடம் முறையிட்டார் என்றாலும், அதற்கு பஞ்சாயத்தார் எங்களால் பேசிமுடிக்கமுடியவில்லை என்றும், எனவே நீங்கள் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. அதுபோன்று எதுவும் நடக்கவில்லை.

10. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் பின்னிட்டும் கூட வாதியின் தகப்பனார் கந்தசாமி இறந்தபின்னர் வாதி பிரதிவாதிகளிடம் பஞ்சாயத்தார் மூலம் தாவா சொத்துக்களை பிரித்து கொள்ளலாம் என்று சொன்னார் என்றால் சரியல்ல. வாதி பஞ்சாயத்து வைத்து பாகம் பிரித்து கொள்ளலாம் என்று சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றாலும், நான் வேண்டுமென்றே பிரதிவாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும் எனக்கு மாமன் மகன் தான்.

11. வாதியின் தகப்பனாருக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே பாகப்பிரிவினை இன்னும் நடைபெறாததால் பாகத்தை பிரித்து கொடுக்கசொல்லி கேட்க வாதிக்கு உரிமையிருக்கிறது என்றால் சரியல்ல. 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கும் இந்த தாவா சொத்தில் பாக உரிமை இருக்கிறது என்றால் சரியல்ல. வாதிகோரியப்படி தாவா செலவுத்தொகையுடன் தீர்ப்பாகதக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

(ஒப்பம்/-த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.